

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தஞ்சாவூர் (வடக்கு) மாவட்ட கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் சாட்கோட்டை க. அன்பழகன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக பொதுச் செயலாளரும் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, கழக துணை பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ. ராசா, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர் கல்யாண சுந்தரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், டிஸ்கவரி பப்ளிகேஷன் நிறுவனத்தின் சார்பில் எழுத்தாளர் அருள்செல்வன் எழுதிய “வாலிபப் பெரியார் ஏ.வி.பி ஆசைத்தம்பி வாழ்க்கை வரலாறு” புத்தகத்தினை வெளியிட திராவிட இயக்க மூத்த ஆய்வாளர் க. திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வின் போது, நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, திருமதி கனிமொழி கருணாநிதி, திருச்சி சிவா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், ஆசைத் தம்பியின் மகன் சௌந்தரபாண்டியன், ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை இதழியல் நிறுவனத்தின்

# நிர்வாகக் குழுத் தலைவராக என்.ரவி - தலைமை இயக்குநராக ஏ.எஸ்.பன்னீர்செல்வன் நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 20-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதழியல் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, ஊடகக் கல்வியை வழங்குவதற்காகவும், இதழியலைத் தொழிலாக தொடங்க விரும்பும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கு குறைந்த கட்டணத்தில் முதுநிலை பட்டயப் படிப்பினை (Post Graduate Diploma Course) வழங்குவதற்காகவும் தமிழ்நாடு அரசு சார்பில் “சென்னை இதழியல் நிறுவனத்தை” தொடங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, சென்னை இதழியல் கல்வி நிறுவனம் 2025-2026 ஆம் கல்வியாண்டு முதல் சென்னையில் தொடங்கப்படும். இதற்காக, ரூ.775 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. சென்னை இதழியல் நிறுவனமானது, நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 8 (1) இன் கீழ், பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை இதழியல் நிறுவனத்தில் (Chennai Institute of Journalism) இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பினை (Post Graduate Diploma of Journalism) இக்கல்வியாண்டு முதல் (2025 - 2026) தொடங்குவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

சென்னை இதழியல் நிறுவனத்தின் நிருவாகக் குழுத் தலைவராக, “தி இந்து” குழுமத்தின் இயக்குநர் (ம) “தி இந்து” நாளிதழின் முன்னாள் தலைமை ஆசிரியர் என். ரவி அவர்களும் தலைமை இயக்குநராக “தி இந்து” நாளிதழின் முன்னாள் ஆசிரியர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

### ஆதிதிராவிடர் - பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு சங்கம் சார்பில் 2023-2024-ஆம் ஆண்டிற்கான

# சிறந்த எழுத்தாளர்களுக்கான ஊக்கத்தொகை - பாராட்டு சான்றிதழ்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

சென்னை, ஜூலை 20-

சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் கூட்ட அரங்கத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு சங்கத்தின் சார்பில் 2023--2024 ஆண்டிற்கான சிறந்த எழுத்தாளர்களுக்கான ஊக்கத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன் வழங்கினார்.

சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் கூட்ட அரங்கத்தில் நேற்று முன்தினம் (18.07.2025) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு சங்கத்தின் சார்பில் 2023--2024 ஆண்டிற்கான சிறந்த எழுத்தாளர்களுக்கான ஊக்கத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்மா.மதிவேந்தன் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப் பின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு சங்கத்தின் சார்பில் 2023-2024-ஆம் ஆண்டிற்கான சிறந்த எழுத்தாளர் 11 நபர்களை தேர்வு செய்து அவர்களின் படைப்புகளை நூல்களாக வெளியீடு செய்வதற்கு முதல் தவணை நிதி உதவியாக தலா ரூ.50,000/- வீதம் மொத்தம் ரூ.5,50,000/- காசோலையாக வழங்கப் பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடவும், இச்சமுகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஊக்கத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன் வழங்கினார்.

இந்நிகழ்வில் ஆதிதிராவிடர் நல ஆணையர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை, இணை இயக்குநர் (பொது) திருமதி.சு. வாசுகி மற்றும் எழுத்தாளர்கள், துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.



கழக சட்ட துறையின் சார்பில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த வழக்கறிஞர்களுக்கு 2026 இல் நடைபெற இருக்கும் சட்டமன்ற பொதுத் தேர்தலில் கழக வழக்கறிஞர்கள் எவ்வாறெல்லாம் செயல் பட வேண்டும் என்பதை மின்னணு பலகையின் மூலம் கழக சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பயிற்சி வகுப்பினை எடுத்தார். இந்தப் பயிற்சி வகுப்பினில் வழக்கறிஞர்கள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இருங்கலூர் ஊராட்சி,தெற்கு புறத்தாகுடி பகுதியில் அ.தி.மு.க. மற்றும் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி தி.மு. கழகத்தில் 120க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன் முன்னிலையில் இணைந்தார்கள். உடன் ஒன்றிய செயலாளர்கள், கிளை செயலாளர், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ‘தமிழ்நாடு நாள்’ விழா!

# அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 100 பேருக்கு நிதி உதவி - ஒப்பளிப்பு அரசாணை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கி சிறப்புரையாற்றினார்!



சென்னை, ஜூலை 20-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் கலை அரங்கில் நேற்று முன்தினம் (18.07.2025) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெறும் “தமிழ்நாடு நாள் விழாவில்”, மாநில அளவில் நடைபெற்ற கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 100 பேருக்கு நிதியுதவி ஒப்பளிப்பு அரசாணையும் வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:

திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துகளுடனும், இன்றைக்கு உங்களுடைய வாழ்த்துகளுடனும் சிறப்பாக தமிழ் வளர்ச்சி துறையின் சார்பில், தமிழ்நாடு நாள் விழா என்கிற வகையில் மட்டுமல்லாமல், ஒரு முப்பெரும் விழா நிகழ்ச்சியாக நம்முடைய அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், உதவி தொகை வழங்கும் நிகழ்வாக அதற்கான அரசாணை வழங்கும் நிகழ்ச்சியாகவும், பேச்சுப்போட்டி கட்டுரைப் போட்டி என்கிற வகையில் கலந்து கொண்டு அதில் பரிசுகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கும் நிகழ்வில் இந்த முத்தமிழ் மன்ற மன்றத்தில் ஒரு முப்பெரும் விழா நிகழ்ச்சியாக நடைபெறும் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் முதலில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த வாய்ப்பை உருவாக்கி தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், காங்கேயம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், உங்களுக்கும் இந்த நேரத்தில் நெஞ்சம் நிமிர்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, முதல் ஆண்டு கொரானா தொற்று என்ற வகையில் இதுபோன்ற நிகழ்ச்சியை நாம் நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குப்பிறகு முதலமைச்சர் எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில், மெல்ல, மெல்ல அந்த நோயிலிருந்து மக்கள் விடுபட்டு, இதுபோன்ற நிகழ்ச்சியை ஒரு அரங்கத்தில் நடத்திக் கொண்டிருக்கிறோம். அதற்குப்பிறகு, இன்றைக்கு பல்வேறு திட்டங்கள் மூலமாக தமிழ்நாடு வளர்ச்சிப் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்வாதாரம் மேம்பட்டு இருக்கிறது. அதை எல்லாம் நான் இந்த நேரத்தில் சொன்னால் நேரம் காணாது. ஏனென்றால், நீங்களும் ஆவலோடு இங்கே நம்முடைய கருத்தரங்கை காண இருக்கிறீர்கள். அந்த வகையில், இந்த சிறப்பான நிகழ்ச்சி உங்கள் முன்னிலையில் நடைபெறுகிறது.

இங்கே எனக்கு முன்னால் பேசிய நம்முடைய இயக்குநர், செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் விளக்கமாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நீங்களும் அறிந்தவர்கள் தான். எனவே, இன்றைக்கு இதை யாரும் அறியாதவர்கள் இல்லை. இன்றைக்கு தமிழ்நாடு விழாவை நாம் எதற்காக கடைப்பிடிக்கிறோம் என்பதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல, எதற்கெடுத்தாலும் போராட்டம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை கடந்த காலகட்டத்தில் இருந்திருக்கிறது. அந்த வகையில், தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று அன்றைக்கு சங்கரலிங்கனார் ஏறத்தாழ 77 நாட்கள் உண்ணாநோன்பு இருந்து தன்னுடைய உயிரை மாய்த்து, இந்த தமிழ்நாடு என்ற பெயரை வைப்பதற்கு ஒரு காரணமாக இருந்தார். அது போன்ற எண்ணற்றவர்கள்.

### தமிழ்நாட்டை பாதுகாக்கிறோம்!

அதுபோல நம்முடைய தாய்மொழி - இன்னும் சொல்லப்போனால் நீங்கள் அனைவரும் அறிவீர்கள் - அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், தமிழில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள் - தமிழ் மொழிக்காக, மொழி அழிக்கப்படுவதை கண்கூடாக பார்க்கும் பொழுது அதற்காக தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அன்றைக்கு ஹிந்தி என்ற போர்வையில் திணித்து, அந்த தமிழை மெல்ல, மெல்ல அழிப்பதற்கு நினைத்தவர்களுக்கு எல்லாம் ஒரு எதிர்ப்பை தெரிவித்து, தன்னுடைய இன்னுயிரை மாய்த்த ஒரு மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அந்த வகையில், இன்றைக்கு தமிழ்நாடு என்கிற பல்வேறு போராட்டங்களை நாம் நிலைநிறுத்தித்தான் தமிழை பாதுகாத்திருக்கிறோம் - தமிழ்நாட்டையும் பாதுகாக்கிறோம் என்கின்ற வகையில் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அவருடைய வழியில் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களும் இதையெல்லாம் பாதுகாத்து தருகின்றார்கள். அந்த பாதுகாத்து தரக்கூடிய அந்த சொத்தை நாம் பாதுகாக்க வேண்டும் - அவர்களோடு உடனிருந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எப்போது பார்த்தாலும் இடையிடையே நம்முடைய தமிழ் மொழிக்கு இடையூறுகள் வந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழன் என்கின்ற அந்த உணர்வோடு அதையெல்லாம் பாதுகாத்து அவர்களுக்கு நாம் உறுதுணையாக இருந்து, மீண்டும் மீண்டும் நம்முடைய கழக அரசு நம்முடைய முதலமைச்சர் தலைமையில், அமைவதற்கான சூழ்நிலையை 7வது முறையாக கழகம் ஆட்சிப் பொறுப்பேற்க வேண்டும். அதே நேரத்தில், முதலமைச்சர் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்க வேண்டும் - இன்னும் இருக்கக் வேண்டிய பணிகளை நம்முடைய ஆட்சி மொழியெல்லாம் இன்றைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - செம்மொழி என்ற அந்தஸ்தை பெற்றது என்று சொன்னால், அன்றைக்கு கழக தலைவர் எடுத்த நடவடிக்கை - அன்றைக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, டாக்டர் மன்மோகன்சிங் தலைமையில் அமைந்த காரணத்தினால், இந்த செம்மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றோம். இப்படிப்பட்ட பல்வேறு காலகட்டங்களில் அதற்கு உறுதுணை புரிந்தவர்கள் - அதற்கு அடித்தளம் இட்டவர்கள் - நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், முத்தமிழ் அறிஞர் அவர்கள், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் - எனவே அவருடைய வழியில் நாம் தொடர்ந்து பீடு நடை போடுவோம் - இந்த சொத்தையெல்லாம் பாதுகாப்பதற்கு அவர்களுக்கு உறுதுணை புரிவோம் என்கின்ற சூழ்நிலையில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டிய நாள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் வலியுறுத்தி, இங்கே வந்திருக்கின்ற அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கான தொகை என்பது 3500 ரூபாயாக தான் இருந்தது - இந்த நிதியாண்டில் தான் முதலமைச்சர் எந்த ஒரு பெரிய கோரிக்கையும் வரவில்லை - அதற்கான போராட்டமும் இல்லை - ஆனால், 7500 ரூபாய் இன்றைக்கு அரசாணை வழங்குவதற்கான நடவடிக்கை எடுங்கள்என்றுஉத்தரவிட்டார்கள்.

ஏறத்தாழ நூறு மடங்குக்கு மேலாக, அந்த அளவுக்கு அந்தத் தொகையை உயர்த்தி, யாரும் எதிர்பாராத வகையில் அதற்கான உத்தரவுகளை வழங்கினார். எனவே, அவருக்கும், உங்களின் சார்பாக என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியையும், வருகை புரிந்திருக்கும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ குழந்தைகளுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.7.2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர மாநகராட்சி இராயபுரம் பேசின் பாலம், பால் டிப்போ பகுதியில் வசித்து வந்த குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு மூலக்கொத்தளம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பிற்கான வீடு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஆர்.மூர்த்தி, வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குனர் திருமதி ஸ்ரேயா பி. சிங் வடக்கு வட்டார ஆணையாளர் கட்டா ரவி தேஜா. இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ந.ப்ரியா ரவிச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.